செ.வெ.எண் -35 நாள்: 18.02.2019

**அரியலூர் மாவட்டத்தில் 10,11 மற்றும் 12-ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு குறித்து அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், பள்ளிகல்லித் துறை சார்பில் 10,11 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு 2019 குறித்து அனைத்துறை அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் **முனைவர்.அ.புகழேந்தி** அவர்கள் முன்னியையில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததவாது,**

அரியலூர் மாவட்டத்தில் மார்ச் 2019-ல் 10,11 மற்றும் 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு மார்ச் 01 முதல் மார்ச் 28 வரை நடைபெறவுள்ளது.

இதில், 12ஆம் வகுப்பில் 8,128 மாணவ, மாணவிகள், 30 தேர்வு மையங்களில் (அரியலூர், செந்துறை மற்றும் உடையார்பாளையம் மாவட்ட கல்வி அலுவலகத்திற்குட்பட்ட) மார்ச் 01 முதல் மார்ச் 19 வரையும், 11ஆம் வகுப்பில் 8,381 மாணவ, மாணவிகள், 30 தேர்வு மையங்களில் மார்ச் 08 முதல் மார்ச் 22 வரையும், 10ஆம் வகுப்பில் 10,935 மாணவ, மாணவிகள், 49 தேர்வு மையங்களில் மார்ச் 14 முதல் மார்ச் 29 வரையும் அரசு பொதுத்தேர்வு எழுதவுள்ளனர்.

தேர்வு மையங்களுக்கு வினாத்தாள் கொண்டு செல்வதற்கு அரியலூர் மற்றும் உடையார்பாளைம் கல்வி மாவட்டங்களுக்கு 9 வழித்தட அலுவலர்களும், 52 முதன்மைக் கண்காணிப்பாளர்களும், 52 துறை அலுவலர்களும், 100 பறக்கும் படை உறுப்பினர்களும், 560 அறைக்கண்காணிப்பாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், தேர்வு நடைபெறும் நாட்களில் தடையில்லா மின்சாரம் வழங்க தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர்களுக்கும், மாணவ, மாணவியர்கள் குறித்த நேரத்தில் பொதுத்தேர்வு எழுத ஏதுவாக போதிய பேருந்து வசதி செய்திட வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் தமிழ்நாடு அரசுப்பேருந்து கும்கோணம் கோட்டம் அரியலூர், ஜெயங்கொண்டம் கிளை மேலாளர்களுக்கு மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளவும், இத்தேர்வுகளை நேர்மையாகவும், முறைகேடுகளுக்கு இடமளிக்காமலும் நடத்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் கென்னடி, ஊர் காவல் படை தலைவர், அரியலூர், செந்துறை, உடையார்பாளையம் மாவட்ட கல்வி அலுவலர்கள், அரியலூர் தீயணைப்புத்துறை அலுவலர், செயற்பொறியாளர் (தமிழ்நாடு மின்சார வாரியம்), அரியலூர், ஜெயங்கொண்டம் கிளை மேலாளர்கள் (அரசுப்போக்குவரத்து கழகம்) பள்ளிக்கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் அரசுஅலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**